**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S.No.368/2015</u>**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | நீ.ம.சா.1 |
| Name | : | புபேஷ் ராஜ்மோகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |
| Occupation | : | Executive Engineer, TNEB. |
| Date | : | 23.10.2025 |

**<u>முதல் விசாரணை</u> :**

எனக்கு இந்நீதிமன்றத்திலிருந்து கோப்பு எண்.செ.பொ.வி.ச.கோ.தொது.உ./கோ.வி.வ/அ.எண்.1763/05 ன் படி பெரியான் மகன் முருகன் என்பாருக்கு மின் இணைப்பு கொடுத்தது சம்பந்தமாக கோப்புகளுடன் நேரில் வந்து சாட்சி அளிப்பது சம்பந்தமாக அழைப்பாணை வந்ததின் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழாக வழங்கப்பட்ட தகவல்கள் எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டவை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள விண்ணப்பம் முருகன் என்பவர் பெயரில் மின் இணைப்பு பெறுவதற்காக பங்குதாரர் கிணறு என்பதால் மனுதாரர் பெயருக்கு மின் இணைப்பு பெற இதர பங்குதாரர்களிடம் இசைவு பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள முருகன் பெயரிலான விண்ணப்பத்தில் பங்குதாரர்கள் பெயர் மற்றும் கையொப்பம் உள்ளது அதனால் அவர்கள் இசைவு கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள விண்ணப்பம் முருகன் என்பவர் பெயரில் மின் இணைப்பு பெறுவதற்காக இதர பங்குதாரர்களிடம் இசைவு கிராம நிர்வாக அலுவலர் நிலையில் கையொப்பம் பெறப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எந்த புல எண்ணில் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாக என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.8. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள விண்ணப்பத்துடன் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் கணிணி பட்டா, 10(1)அடங்கல், கூட்டு உரிமையாளர் சான்று, கிணற்று உரிமையாளர்கள் விபரம் அடங்கிய சான்று, புலப்படம் ஆகியவை படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் கிராம நிர்வாக அலுவலரால் புல எண் யாருக்குப் பாத்தியப்பட்டது என்பதற்கு தனியாக சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் VAO விவசாய இடத்திற்கு வரி இல்லை என தெரிவித்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தில் 4 வது காலத்தில் கிணற்றின் சொந்தக்காரர் மற்றும் பங்குதாரர் பெயர் என்ற விபரத்தில் முத்து, த/பெ.பெரியான், முருகன், த/பெ.பெரியான், வேலு, த/பெ.பெரியான், சண்முகம், த/பெ.பெரியான் எனக் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தில் 5 வது காலத்தில் கிணற்றின் பரப்பு 1.22 ஹெக்டேர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு தற்போது வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>1,3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் தவசி, மாரிமுத்து, முருகேஷ் ஆகிய பெயர் எந்த இடத்திலும் துலங்கவில்லை என்றால் சரிதான். அதேபோல என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் சங்கரன் என்ற பெயர் எந்த இடத்திலும் துலங்கவில்லை என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் உள்ள பட்டாவில் பெரியான் மகன் சங்கரன் என்ற பெயர் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் கூட்டு உரிமையாளர் பெயரில் மின் இணைப்பு வேண்டும் என விண்ணப்பம் கொடுக்கப்படவில்லை என்றால் கூட்டுப் பங்குதாரர்கள் என்ற முறையில் விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுப் பங்குதாரர்கள் என்பது பெரியான் என்பவரின் வாரிசுகள் மட்டும் தான் விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சங்கரனுடைய வாரிசுகள் சேர்ந்து என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் மின் இணைப்பு விண்ணப்பம் கொடுத்ததாக துலங்காது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் மின் இணைப்பு விண்ணப்பம் பெரியான் மகன் முருகன் என்பவர் தான் விண்ணப்பதாரர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் மின் இணைப்பு விண்ணப்பத்தில் மின் மோட்டாருக்கான எஸ்டிமேசனில் பெரியான் மகன் முருகன் என்ற பெயர் தான் உள்ளது என்றால் சரிதான் மின் மோட்டார் வாங்கிய ரசீதில் பெரியான் மகன் முருகன் என்ற பெயர் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் மின் இணைப்பு விண்ணப்பத்தில் தவசி, மாரிமுத்து, முருகேஷ், முத்துக்குமார், சரவணன் பெயர் இல்லை என்றால் சரிதான். தவசி, மாரிமுத்து, முருகேஷ், முத்துக்குமார், சரவணன் ஆகியோர் எங்கள் அலுவலகத்தில் பொது மின் இணைப்பு தனியாக மின் இணைப்பு வழங்கியது தவறு என ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வரை மின் இணைப்பு பெரியான் மகன் முருகன் என்ற பெயரில் தனிப்பட்ட மின் இணைப்பாக தான் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.23 17:32:39 +0530